# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



## ஜுமுஆ பேருரை

தலைப்பு :

**அல் - ஹுஜுராத்:**

**புறங்கூறுதல் (பகுதி 4)**

**04 October 2019**

**(05 Safar 1441 AH )**

**ஹஸ்ரத் முஹையுதீன் அல் கலீஃ.பத்துல்லாஹ்**

**முனீர் அஹ்மது அஸீம் (அலை)**

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**



# AL--Hujurat : Ghibbat (Part 4)

**அல் - ஹுஜுராத்: புறங்கூறுதல் (பகுதி 4)**

---

உலகெங்கிலும் உள்ள தனது சஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினைத் தெரிவித்தபிறகு, **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தஷஹுத், தவ்வூத் மற்றும் சூறா.ஃ.பாத்திஹா ஓதி "கடந்த வார ஜுமுஆ பேருரையின் தொடர்ச்சியை கிப்பத் பாகம் 4" என்ற தலைப்பில் ஜுமுஆ பேருரையியை வழங்கினார்கள்.

மூன்று வாரங்களுக்கு முன்பு நான் ஆரம்பித்த எனது வெள்ளிக்கிழமை பேருரையின் விஷயத்தைத் தொடர எனக்கு தவ்.ஃ.பீக் வழங்கியதற்கு முதலில் நான் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன். எனது கடந்த வெள்ளிக்கிழமை பேருரையில் ஜமாஅத்துக்காக சேவைபுரிந்து வருபவர்களுடன் அதாவது இறைவழியில் உழைப்பவர்களுடன் அன்பை உருவாக்க நான் கூறியிருந்தேன்.

நீங்கள் அல்லாஹ்வின் மீது உண்மையான அன்பைக் கொண்டிருந்தால், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்), வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் இந்த நூற்றாண்டின் அல்லாஹ்வின் கலீ.ஃ.பா (கலீ.ஃ.பத்துல்லாஹ்) மீது உங்களுக்கு சிறிய அளவிலாவது அன்பு இருந்தால், நிச்சயமாக நீங்கள் ஜமா அத்துக்காக உழைப்பவர்கள் மீதும் அன்பு வைத்திருப்பீர்கள். கடந்த வெள்ளிக்கிழமை எனது பேருரையில் நான் குறிப்பிட்டது போல் மக்களுடன் நல்லுறவை கொண்ட ஒரு அமைப்பைச் சார்ந்த யாருக்கும் ஆணவத்துடனோ அல்லது அலட்சியமாகவோ ஒருபொழுதும் செயல்பட இயலாது. அந்நிலையில் ஜமா அத்துக்கு எதிராக பேசுவதற்கு உங்களுக்கு முடியாது. மேலும் ஜமா அத்தின் பொறுப்பாளர்களைக்

கேலி செய்தவற்கும், குறை கூறுவதற்கும் உங்களுக்கு சாத்தியமில்லை. அதாவது அவர்களுக்கு எதிராக நீங்கள் கிப்பத்தில் ஏற்படமாட்டீர்கள், ஜமா அத்துக்கு எதிராக நீங்கள் பேசமாட்டீர்கள்.

இது, ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள் மற்றும் பிற முஸ்லீம்களும் அத்தகைய தீமைகளிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்பதற்கு நான் சொல்லும் ஒரு பொதுவான கருத்தாகும். ஜமா அத்துச் சஹீஹீல் இஸ்லாமின் உறுப்பினர்கள் இத்தகைய தீமைகளிலிருந்து முற்றிலும் விடுபெற வேண்டும் என்று எனது கடந்த கால வாழக்கை மற்றும் அனுபவத்திலிருந்து நான் உங்களுக்கு எச்சரிக்கை விடுக்க விரும்புகிறேன். இதையெல்லாம் உங்கள் சுய நலனுக்காகவே நான் கூறுகிறேன். இந்த தாழ்மையையான ஊழியனை நீங்கள் நம்பாவிட்டாலும் இந்த செய்தியை உங்கள் சுய நலனுக்காக எடுத்துக் கொள்ளுங்கள்.

அங்கு அவதூறு மட்டுமல்ல, பாசாங்குத்தனமும் உள்ளது. இவை இரண்டும் ஒரு தொகுப்பு போன்று புறங்குறுதலுடன் இணைந்திருக்கின்றது. மேலும் இது கொஞ்சம் கொஞ்சமாக கிளர்ச்சியாக மாறுகிறது. மேலும் ஒருவர் மீது தவறான குற்றச்சாட்டுகளை கூறும் பழக்கத்தை உங்களிடம் அது வளர்த்துக்கொள்கிறது. இவை அனைத்தும் ஒரே வகையில் தான் உள்ளன. நாம் கிப்பத் பற்றி பேசும்போது, இதில் பாசாங்குத்தனம், கிளர்ச்சி, பழி போன்றவை உள்ளடக்குகிறது. இவை அனைத்தும் கை கோர்த்துச் செல்லும் ஒரே மாதிரியான நோய்கள் ஆகிறது. எனவே ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றி பேசுவது ஒரு எளிய விஷயம் என்று நினைக்காதீர்கள். நீங்கள் வதந்திகள் மற்றும் புறம்கூறுதலுகளிலிருந்து வெகுதூரம் விலகி இருக்க வேண்டும். அதற்கான ஒரு வழி என்பது, மற்றவர்களுடன் நீங்கள் அன்பின் உறவை வளர்ப்பது தான். நிஸாமே ஜமா அத்தைப் பொறுத்தவரை உங்களுக்குள் அன்பு இருக்க வேண்டும். அந்த அன்பு அல்லாஹ்வின் மீதான உங்கள் அன்போடு இணைந்திருக்கின்றது. இது மிகவும் தெளிவான விஷயம். ஆனால் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களைப் பொறுத்தவரை, நீங்கள் அனைத்து முஸ்லீம்களிடமும் அன்பு வைத்திருக்க வேண்டும்.

ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீமிடம் இத்தகைய தவறான செயலை செய்யக்கூடாது என்று அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு அறிவுரை வழங்கியுள்ளார். மேலும் ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீமுக்கு தீங்கிழைக்க கூடாது என்றும் அன்னார் கூறியுள்ளார். முழு பிரபஞ்சத்திற்கும் ஒரு கருணையாக தோன்றிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வார்த்தையால் நான் முன்பு ஆச்சரியப்பட்டேன். முஸ்லீம்களின் நன்மைகளை மட்டும் ஏன் அவர் குறிப்பிட்டார் என்றும் ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீமிடம் மிக சிறந்த முறையில் நடந்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் ஏன் சொன்னார்? ஆனால் நான் அதைப் பற்றி யோசித்தபோது முஸ்லீம்களுக்கு அவர் வழங்கிய மிகச் சிறந்த ஒரு அறிவுரை இது என்பதை நான் உணர்ந்தேன். இந்த நல்ல அறிவுரை இருந்தபோதிலும், இன்று இதை கவனத்தில் எடுத்துக் கொள்ளும் ஒரு முஸ்லீமாவது இருக்கிறாரா? அவர்கள் ஒருவருக்கொருவர் கொலை செய்கிறார்கள், வெறுப்புடன் நடந்துக் கொள்கிறார்கள், தங்கள் சகோதரர்களுக்கு எதிராக பொறாமையுடன் இருக்கிறார்கள். இவ்வாறிருந்தும் அவர்கள் திரு நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு இருப்பதாக கூறத்துணிகிறார்கள்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த அறிவுரை மிகவும் அழகானது மற்றும் முக்கியமானது. ஏனென்றால் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோக்கில், ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீமுடன் மிக நல்ல முறையிலான ஒரு உறவைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு முஸ்லீம் மற்ற முஸ்லீம்களின் வட்டத்திற்கு வெளியே என்று அவர் உணருவதால் இந்த அன்பு பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ விரைவில் குறைந்து வருகிறது. உறவு அங்கு உறுதியாக உள்ளதை காணலாம். ஆனால் அது பலவீனமடைந்து காண்கிறது.

அதனால்தான் அவர்கள் மிக வலுவான உறவைக் கொண்டிருக்க வேண்டும் என்று இந்த அறிவுரையில் குறிப்பிடப்படுகின்றன. மற்ற முஸ்லீம்களுக்கு நீங்கள் தீங்கு விளைக்கக் கூடாது என்று மட்டுமல்லாது உங்களின் அதே நம்பிக்கை மற்றும் மதிப்புடன் வாழ்ந்து வரும் உங்கள் அண்டை முஸ்லீம் சகோதரரை காயப்படுத்தும் இத்தகைய எண்ணத்திலிருந்து நீங்கள் விலகி இருக்க வேண்டும். இதன் பொருள்படி ஒரு முஸ்லீம் மற்றொரு

முஸ்லீமுக்கு தீங்கு விளைவிப்பதாக எண்ணுவது ஒரு போதும் சாத்தியமில்லை. மேலும் நீங்கள் எப்போதாவது மற்றொரு முஸ்லீமுக்கு தீங்கு விளைவித்தால், அது நிச்சயமாக ஒரு பாவம் ஆகிறது. அந்நிலையில் உங்களை ஒரு முஸ்லீம் என்று ஒருபோதும் அழைக்க முடியாது.

அதன் அர்த்தம், நீங்கள் முஸ்லீமல்லாதவர்களுக்கு தீங்கு விளைவிக்கலாம் என்பதல்ல. ஒருபோதுமில்லை. முஸ்லீம்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் யாரையும் புண்படுத்தக்கூடாது. இந்த விஷயம் தொடர்பாக மற்று பல ஹதீஸகள் உள்ளன. அந்த ஹதீஸ்களில் இஸ்லாம் பற்றி அதாவது முஸ்லீமகளைப் பற்றி மட்டும் குறிப்பிடப்படவில்லை. மாறாக மனித குலத்தின் உரிமை குறித்து பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு மக்கள் உரிமைகள் பற்றிய குறிப்பு மட்டுமல்ல, விலங்குகளின் உரிமைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு குறிப்பிடப்பட்டிருப்பதை பாருங்கள் விலங்குகளிடம் கூட நாம் சிறந்த முறையில் நடந்துக்கொள்ள வேண்டும். அந்த ஹதீஸ்களில் திரு நபி (ஸல்) அவர்கள் ஒருவருக்கு வழங்கிய அறிவுரை உள்ளன. **"இந்த ஒட்டகத்துடன் நீங்கள் எவ்வாறு நடந்துக்கொண்டீர்கள் என்பது குறித்த ஒரு கணக்கு தீர்ப்பு நாளில் உங்களுக்கு கொடுக்க இருக்கும் இந்த ஒட்டகத்துடன் நீங்கள் நல்ல முறையில் நடந்துக்கொள்ளவில்லை என்று உங்களுக்கு எதிராக அது புகார் கூறலாம்."** இது கேட்டு அந்நபர் உடனே ஒட்டகத்தை விடுவித்தார். அவர் மனந்திரும்பினார். அவர் அதை விடுவித்தது மட்டுமல்லாமல் இனி ஒரு போதும் ஒட்டகத்தை காயப்படுத்த மாட்டேன் என்று முடிவு செய்தார். அப்போது தான் திரு நபி (ஸல்) அவர்கள் அவரிடம் **"ஒட்டகத்தை விடுவிக்காவிட்டால் அல்லாஹ் உங்களை தண்டித்திருப்பான்"** என்று கூறினார்.

ஒரு பறவையின் வேதனையான அழுகை கேட்டபோது கூட அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருத்தப்பட்டார். ஒருநாள் அன்னார் தனது கூடாரத்திலிருந்து வெளியே வந்து இந்த பெண் பறவையை யார் காயப்படுத்தினார்கள் என்று கேட்டார். யாரோ அதன் முட்டையையோ அல்லது அதன் குஞ்சையோ எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. உண்மையில் அவ்வாறே நடந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், சஹாபாக்களில் ஒருவர் இரண்டு பறவை குஞ்சுகளை எடுத்து சென்றார். இத்தகவல் அறிந்த திரு நபி (ஸல்) அவர்கள்

அப்பறவை குஞ்சுகளை திரும்ப அதன் கூட்டில் வைக்குமாறு அவருக்கு கட்டளையிட்டார். அவற்றை மீண்டும் பறவைகள் கூட்டில் வைத்த பிறகுதான் திரு நபி (ஸல்) அவர்கள் நிம்மதி அடைந்தார். இது தான், ரஹ்மத்துல்லில் ஆலமீன் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள்.

எனவே, **ரஹ்மத்துல்லில் ஆலமீன் என்னும் வெளிப்பாடு வார்த்தையை வரையறுக்க போதுமான சக்திவாய்ந்த வேறு எந்த வார்த்தையும் இல்லை. ஏனெனில் இச்சிறப்பு பெயர் திரு நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்டது மற்றும் அசாதாரண அர்த்தங்களால் அது நுணுக்கமானது. அதற்கு ஒரு பொருளை மட்டும் நமக்கு வழங்க முடியாது. எனவே இது பற்றிய குறிப்பு முஸ்லீம்களுக்கு வழங்கப்படும்போது, அவர்களின் ஆன்மீக கல்விக்கு இது ஒரு சிறந்த வழியாகும். ஏனென்றால் ஏற்கனவே அவர்கள் அனைவரும் (முஸ்லீம்கள்) உறுதியாக இணைந்திருக்க வேண்டியவர்கள் மேலும் அவர்களுக்கிடையே மிக ஆழமான உறவு இருக்க வேண்டும். அதே அர்த்தத்தில், இந்த வார்த்தையின் விரிவான அர்த்தத்தில், கிப்பத் விஷயமும் நம் கவனத்திற்கு வருகிறது என்பதை நாம் காண்கிறோம்.**

அல்லாஹ்வின் மார்க்கத்திற்காகவும், ஜமா அத்துக்காகவும் அல்லாஹ்வின் வழியில் உடலளவிலும் மனதளவிலும் உழைப்பவர்களுக்கு எதிராக ஒருவர் பேசக்கூடாது என்பதை புரிந்து கொள்வது எளிது போலவே இதை நன்கு புரிந்துக் கொள்வது மிகவும் எளிதானது. முஸ்லீம்களிடம் தவறாக நடந்துக்கொள்ள எந்த உரிமையும் உங்களுக்கு இல்லை. பொதுவாக, ஒரு முஸ்லீமை கேலி செய்வது கூட ஒரு மோசமான மற்றும் பாவமான செயலாகும்.

ஆகவே, ஒரு முஸ்லீம் தனது தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயன்படுத்திய சிறந்த வழிகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும் ஒரு முஸ்லீம் தனது முஸ்லீம் சகோகதரர்களுடனான இந்த சிறந்த உறவை இழக்கக்கூடாது. அதற்காக நீங்கள் அல்லாஹ்வின் மற்றும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) மீதும் உறுதியான அன்பை வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் நீங்கள் இந்த அன்பை அனைத்து முஸ்லீம்களுடனும் உறுதியாக நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். மேலும் இந்த அன்பை நீங்கள் முஸ்லீம்களிடையே மட்டுமல்ல, முழு மனிதகுலத்திற்கும் பகிர்ந்துக்கொள்ள வேண்டும். அண்ணல் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்களிடமிருந்து அன்பை முஸ்லீம்கள் பெற்றார்கள். அத்தகைய அன்பு இப்போது முஸ்லீம்களாகிய உங்களிடையே இல்லை. ஆனால் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) மீது அன்பை வைத்திருப்பதாக நீங்கள் உரிமை கோருகிறீர்கள். திரு நபி (ஸல்) மீது உங்களுக்கு அத்தகைய அன்பு இருந்தால், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் முஸ்லீம்களுடன் மிகவும் நெகிழ்வானவர் என்று திருக் குர்-ஆன் கூறுகிறது. அவர் முஸ்லீம்கள் மீது மிகுந்த அன்பும், மென்மையும் கொண்டவராக இருந்தார். அவர் அவர்களிடம் கருணையுடன் நடந்துக்கொண்டார். அதாவது ஒவ்வொரு நேரமும் அவர் அவர்களிடம் இரக்கமுள்ளவராக இருந்தார். அவர்களிடம் பரிதாபத்துடன் நடந்துக் கொண்டார்.

இப்போது உங்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) மீது அன்பு இருந்தால், நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் நேசித்த அனைவரிடமும் நீங்கள் அன்பு வைத்திருக்க வேண்டும். உண்மையில், நபி (ஸல்) அவர்கள் தனது இதயத்தின் நிலைமையை நன்கு அறிந்திருந்தார். அதில் எவ்விதமான குறையும் இல்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் ஒருபோதும் மோசமான எண்ணங்களைக் கொண்டிருக்கவில்லை. அவர் மற்றவர்களிடம் எந்தவிதமான வெறுப்பையும் கொண்டிருக்கவில்லை. அவர் ஒரு போதும் வெளிவேடம் காட்டியதில்லை. அவரைப் பொறுத்தவரை, எல்லோரிடத்திலும் அன்பு எவர் மீதுமில்லை பகைமை என்பதை மக்களுக்கு காட்ட பெரிய விளம்பர பலகை எதுவும் அவரிடம் இருந்ததில்லை.

மட்டுமல்ல, புறக்கணிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் அவர் மக்களிடம் இதயங்களில் ஒருபோதும் வெறுப்பை விதைக்கவில்லை. அவர் யாரையும் புறங்கூறியதில்லை, குடும்ப உறவுகளை ஒருபோதும் முறித்துக்கொள்ளவில்லை. அவரது வாழ்நாளில் தனது தோழர்களின் பெற்றோர்கள் முஸ்லீம் நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தும், தங்களது குடும்ப உறவுகளை முறித்துக் கொள்ளுங்கள் என்றோ, அவர்களை புறக்கணித்து விடுங்கள் என்றோ, அவர்களை சந்திப்பதை நிறுத்துங்கள் என்றோ தனது தோழர்களுக்கு அவர் ஒருபோதும் கட்டளையிடவில்லை. அவரது செய்தியை நம்பாத அவர்களது குடும்பங்கள் அல்லது நண்பர்களுக்கு எதிராக ஒருபோதும் அவர் முஸ்லீம்களின் இதயத்தில் வெறுப்பை விதைக்கவில்லை. ஆனால் சில நேரங்களில் ஒரு

குறிப்பிட்ட நோக்கத்துடன், அவர் சில விஷயங்களை குறிப்பிட வேண்டியிருந்தது. ஆனால் அவை அவதூறுகள் அல்ல. அவர் ஒருபோதும் வெறுப்பு மற்றும் புறக்கணிப்பு போன்ற மொழிகளில் பேசியதேயில்லை. புறங்கூறுவதற்கு அவர் யாரையும் ஊக்குவிக்கவில்லை. ஒருபோதும் இல்லை.

ஆகவே, நாமும் எல்லா மக்களிடமும் அன்பு வைத்திருக்க வேண்டும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நேசித்த அனைத்தையும் நாம் நேசிக்க வேண்டும். அது பொருட்களாகட்டும் அல்லது விலங்குகளாகட்டும்! இதைக்குறிப்பிடுகையில், நீங்கள் ரவு.்.ப் மற்றும் ரஹீம் பண்புகளுடன் நடந்துக்கொள்ள வேண்டும் என்று அனைத்து முஸ்லீம்களும் எதிர்பார்க்கின்றார்கள். ஏனெனில் நீங்கள் ரவு.்.ப் மற்றும் ரஹீம் ஆகிய முஹம்மது (ஸல்) அவர்களை நேசிப்பதாக கூறுகிறீர்கள்.

எனவே இந்த அர்த்தத்தில், நீங்கள் நன்மையின் அடிப்படையில் உங்கள் உறவை நிலைநாட்டும் போது உங்கள் அந்த நல்ல செயல்கள் எல்லா முஸ்லீம்களுக்கும் ஒரு நிழல் போல மாறும். இந்த நிழலின் கீழ் கிப்பத் என்னும் தாவரம் ஒரு போதும் வளராது. சில நிழல்களின் கீழ் இறக்கும் சில தாவரங்கள் உள்ளன. ஆனால் ரவு.்.ப் மற்றும் ரஹீம் குணங்களுடன் தொடர்பு கொள்ளும்போது கிப்பத் என்னும் தாவரங்களுக்கு வளரவோ பரவவோ ஒருபோதும் முடியாது.

எனவே, கிப்பத்தை தவிர்க்க இது ஒரு வழியாகும், அதாவது ரஹ்மத்துலில் ஆலமீனைப் பொறுத்தவரை, மிக விரிவான நோக்கில், மனிதகுலத்தை ஒட்டுமொத்தமாகக் கருத்தில் கொண்டு, அனைத்து மனித குலத்துடனும் நீங்கள் நல்ல முறையிலான ஒரு உறவை ஏற்படுத்தவேண்டும். இதின்றி உங்களுக்கு வேறுவழியில்லை. நான் இங்கு குறிப்பிடுவது செயற்கை அன்பை அல்ல. ஒருபோதும் அல்ல. செயற்கை அன்பில் உண்மையில்லை. அது சுத்த பாசாங்குத்தனம். அவ்வளவு தான். ஆனால் மனிதகுலத்தின் மீது உண்மையான அன்பை காட்டுவது என்பது மிகவும் ஆழமான ஒரு விஷயமாகும். அதைப்பெறுவதற்கு ஒரு வகையான ஜிஹாத் தேவைப்படுகிறது. இப்போது, நீங்கள் ஜிஹாத் மற்றும் முஹபத்தை ஒன்றாக இணைக்க வேண்டியதில்லை. ஒருபோதும் இல்லை. நான் உங்களுக்கு சொல்ல விரும்புவது என்னவென்றால்,

இயல்பான அன்பு. அத்தகைய இயல்பான அன்பைத்தான் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மினத குலத்தின் மீது வைத்திருந்தார். அவருக்கு அல்லாஹ்வுடன் நேரடி தொடர்பு இருந்தது. மேலும் அந்த அன்பு அல்லாஹ்விடமிருந்து நேரடியாக அவருக்கு வந்தது. எனவே அதற்காக அவர் போராட வேண்டிய அவசியம் வரவில்லை.

நான் இப்போது இங்கே இந்த பேருரையை நிறுத்துகிறேன். அல்லாஹ்வின் அருளால் அதன் விளக்கங்கள் மழை போல பொழிகிறது. அடுத்த வாரமும் இன்ஷா அல்லாஹ் இவ்விஷயத்தில் தொடர்ந்து பேசுவேன். இந்த விஷயத்தில் இன்னும் எத்தனை பிரசங்கங்கள் இருக்கும் என்பதை அல்லாஹ் நன்கு அறிவபனாக இருக்கின்றான். இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ் உங்கள் அனைவரிடமும் கருணை காட்டி, நப்ஸுக்கு எதிராக போராட்டத்தை மேற்கொள்வதற்கும், உங்களுக்கும் உங்கள் முஸ்லீம் சகோதர சகோதரிகளுக்கும் இடையில் நல்ல உறவை ஏற்படுத்துவதற்கும் அவன் உதவி புரிவானாக. அல்லாஹ்வின் ஜமா அத்தில் உறுப்பினர்களாகிய உங்களுக்கு அதற்கு முடிந்துவிடட்டும். உங்கள் சகோதர சகோதரிகளிடம் அனுதாபத்தை வளப்பதற்கும், புறங்கூறுதலுக்கு எதிராக போராடுவதற்கும் அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிவானாக! உங்கள் இஸ்லாம் மற்றும் மனித நேயத்தை கெடுக்கும் அனைத்து வகையான தீமைகளிலிருந்து விலகி நிற்க அல்லாஹ் உங்களுக்கு துணை புரிவானாக! இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**

Naib Amir **Azim Ahmad**

Editing & Publishing are done by
*AMIR*
*JAMAAT - UL-SAHIH-AL-ISLAM*
*TAMIL NADU*
Ph No: 917502272774